1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இவைகள் எல்லாம் ரேட் கான்ட்ராக்ட் முறையிலே வாங்கப்பட்டிருக்கின்றது. கிரிவ்ஸ் காட்டன் என்ற கம்பெனியிலே இருந்து ரேட் கான்ட்ராக்ட் மூலம் சாலை உருளைகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரோட் ரோலர் வாங்கப்படும் என்று சொன்னார்கள். பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களில் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்ற டிராக்டர்கள் எந்தவிதப் பயனும் இல்லாத நிலையிலே வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அவற்றை விற்றுவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டு ரோட் ரோலர் வாங்கி உதவி செய்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இருக்கின்ற டிராக்டர்கள் எல்லாம் என்ன நிலையிலே இருக்கும் என்பது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதை விற்றால் எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதும் தெரியும். கண்டிப்பாக, அவற்றை விற்றால் ஒரு ரோட் ரோலரைக் கூட நல்ல நிலையிலே இயங்குகின்ற வகையிலே வாங்க முடியாது.

ஆனால் இதுபோன்ற பழைய டிராக்டர்களை எல்லாம் நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருந்துறை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 135 திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பெருந்துறை ஒன்றியத்தில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவலை போய்விட்டது என்றால் தலை போய் விட்டது என்று சொல்வார்கள். அதேபோன்று பெருந்துறை ஒன்றியத்திலே விஜயமங்கலம் என்ற இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுமா என்பது கேள்வி. அந்த வகையிலே பெருந்துறை ஒன்றியத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க அரசிடம் செயறகுறிப்பு உள்ளதா என்று இருக்கின்றது. ஆனால் ஏற்கெனவே பெருந்துறை ஒன்றியத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றது, ஆகவே ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ற காரணத்தாலேயும்

பெருந்துறை வட்டம் தலைநகரம் ஆகிவிட்ட காரணத்தாலேயும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் விஜயமங்கலத்திலே ஆரம்பிக்கப்படுமா?

[முற்பகல் 9.50]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய சந்தேகம் உண்மையான சந்தேகம்தான். பெருந்துறையில் இருக்கும் மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக ஆக்கலாமா என்ற எண்ணம் அரசிடம் இருக்கிறது. பெருந்துறை தாலுக்கா தலைநகரமாக மாற்றப்பட்ட சூழ்நிலையில் ஒருவேளை அப்படிச் செய்யப்படுமேயானால், மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் சொல்லக்கூடிய அந்தக் கருத்தும் பரிசீலிக்கப்படும். அது மட்டும் அல்லாமல் குறிப்புகளையும் கேட்டிருக்கிறோம். அதாவது, இருக்கிற மருத்துவமனையை மாற்றி தாலுக்கா மருத்துவமனையாக ஆக்குகிறபோது, இப்போதிருக்கும் இடத்திலோ அல்லது வேறு ஏதாவது ஒரு இடத்திலோ ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சரியாக இருக்குமா; இடம் கிடைக்குமா என்பது பற்றி, டைரக்டர் ஆப் பிரைமரி ஹெல்த் டிபார்ட்மென்ட் அவர்கள், மெடிகல் ஆபிசரை கேட்டிருக்கிறார்கள். அது வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையம் கூட, மாவட்ட சுகாதார அதிகாரிகள் மூலமாக, விஜயமங்கலத்தில் ஆரம்பிக்கலாம் என்ற உத்தேசத்தோடு, அங்கே 5 ஏக்கர் நிலமும், அப்படி ஆரம்பிப்பதற்கு தேவையான பணம் 10,000மும் வசூலிக்க என்று திட்டம் இருக்கிறது. அது உடனே தெரிந்தால், மேற்கொண்டு இட வசதியையும் பெறுவதற்கும், பணம் வசூலிப்பதற்கும் எங்களுக்கு வசதியாக இருக்கும். அத்தோடு அந்த நடவடிக்கைகளையும் தீவிரமாக உடனடியாக அரசு எடுக்குமா என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நான் வாக்குறுதி கொடுக்க முடியாது. இருந்தாலும் கூட நான் சொல்லிய அந்த விடைகளை வைத்துக் கொண்டே, அதற்குரிய வேலைகளை அதிகாரிகள் எடுத்துக்கொள்ளக்கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தனிப்பட்டதாக இருந்தாலும் கூட, 1980-81ஆம் ஆண்டுக்கு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்கவிருக்கிறீர்கள்? அதிலே 10,000 பணம் கொடுத்து, 5 ஏக்கர் நிலமும் கொடுத்து 1 லட்சம் ரூபாய் கட்டிடங்கள் கட்டவும், நன்கொடை கொடுத்திருந்தும், எத்தனை இடங்கள் இன்னும் சேங்ஷன் செய்யப்படாமல் இருக்கின்றன என்பது போன்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறியவிரும்புகிறேன்.

1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுவான கேள்வி. 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை இந்த 80-8-ல் துவக்கவிருப்பதாக மதிப்பீடுகள் போட்டிருக்கிறோம். அதற்கான வேலைகள் நடைபெற்று, ஆணைகள்—ஜி.ஓக்கள் கூட பிறப்பிக்கப்பட்டு விட்டன. பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அந்த 20 ஆரம்பச் சுகதார நிலையங்களை எந்த அடிப்படையில் எடுத்திருக்கிறோம் என்று உறுப்பினர் அறிய விரும்புவதாக தெரிகிறது. ஜனத்தொகை அடிப்படையிலே, அதாவது 1 லட்சம் ஜனத்தொகை இருக்குமேயானால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க முன் உரிமை அளிக்கப்படுகிறது. அது போலவே, 10,000 அளித்து நிலத்தையும் கொடுத்து முன் வருவார்களேயானால், அதற்கும் முன்னுரிமை கொடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் தன்னுடைய ஒன்றியத்திற்கு வரவில்லை என்ற அடிப்படையில் கேட்கிறார் என்று நினைக்கிறேன். அதைக்கூட நிச்சயமாக அடுத்த கட்டத்தில் நிறைவேற்ற எண்ணியிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்பகோணம் அரசினர் மருத்துவமனை.

*வினா எண் 136— திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கும்பகோணம் அரசினர் மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு விஸ்தரிக்கும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு விஸ்தரிப்புக்கான செயற்குறிப்புகள் அரசுக்குக் கிடைத்தவுடன் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவிற்கான தனிக்கட்டிடம் கட்ட, அங்கேயுள்ள ரோட்டரி சங்கத்தினர் 2 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் அவர்கள் முன்னாலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த நன்கொடையைப் பெற்றாவது, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்றை உடனடியாக கட்ட அரசு முன் வருமா? அத்தோடு அங்கே பொதுமக்களே கூட அந்த மருத்துவமனைக்கென ஒரு ஜெனரேட்டர் ஒன்றை வாங்கி நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். அது பொருத்தப்படாமல், உபயோகப்படாமல் இருக்கிறது. அதை உபயோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா? அத்தோடு கும்பகோணம் மருத்துவமனையை தஞ்சை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனையாக மாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.